# மெய்யான விடுதலையின் சிறந்த வார்த்தை




## 2.8 இந்த நித்திய வாழ்வு

**வேத வசனம்:** **குமாரனைக் கண்டு, அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் நித்தியஜீவனை அடைவதும், நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவதும், என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது என்றார்.**

*யோவான் 6:40*

**அறிக்கை:** குமாரனாகிய இயேசுவை உடையவனுக்கு நித்திய வாழ்வு உண்டு



**சத்தியம்:** தேவன் நமக்கு நித்திய வாழ்வைக் கொடுத்திருக்கிறார். இந்த நித்திய வாழ்வு அவருடைய குமாரனில் காணப்படுகிறது. எனவே தேவனுடைய குமாரனை உடையவனுக்கு நித்திய ஜீவன் உண்டு.

### வேத பகுதி: வெளி. 21:18-27

**பாடம்** **1. தேவன் நித்திய வாழ்வைக் கொடுத்திருக்கிறார்:** கிறிஸ்து நம்மிடம் இருப்பார் என்றால் நமக்கு நித்திய வாழ்வு உண்டு என்று வேதம் சொல்லுகிறது. ஆகையால் இயேசுவிடம் நித்திய வாழ்வு உண்டு என்பதை நாம் அறிகிறோம். இந்த நித்தியவாழ்வு மரணத்திற்கு பின்பு மனிதருக்குள் வருவது இல்லை. மாறாக இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவனிடம் நித்தியவாழ்வு முன்பிலிருந்தே இருக்கிறது. (யோவான் 5:12)

**2. ராஜரீக வாழ்க்கை:** இந்த நித்தியவாழ்வு இராஜ்யத்தின் வாழ்வு என்றும் அழைக்கப்படுகிறது. ஒரு நபர் தேவனாகிய கர்த்தரை அரசனாக ஏற்றுக்கொண்டு அவர் தன்னை ஆளும்படி ஒப்புக்கொடுக்கும்போது அவர் இராஜ்ஜியத்தின் புத்திரராக மாறுகிறார். தேவனுடைய இராஜ்ஜியத்தில் சமாதானமும், மகிழ்ச்சியும், அபரிவிதமான தேவ வல்லமையும் உண்டு. “தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே... அவரை உன்னதங்களில் தம்முடைய வலதுபாரிசத்தில் உட்காரும்படி செய்து...” (ரோமர் 1:4:17, எபேசியர் 1:19-21)

**3. மகிமையான வாழ்க்கை:** தேவனுடைய நித்தியத்தில் இருள் இல்லை என்று வேதம் குறிப்பிடுகிறது. தேவன் அன்பானவராகவும் பரிசுத்தமுள்ளவராகவும் இருக்கிறார். அசுத்தமானவர்களும் அக்கிரமம் செய்கிறவர்களும் அதில் பிரவேசிக்க இயலாது. ஆகையால் நாம் அக்கிரமத்தையும் விரும்பத்தகாதவைகளையும் விட்டொழிக்க வேண்டும். (வெளி. 21:23-27)

**4. பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்:** நித்திய வாழ்வில் தேவனுடைய ஆவியானவர் வாசம் செய்கிறார். தேவனாகிய கர்த்தர் சொன்னார், “கடைசிநாட்களில் நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்கதரிசனஞ்சொல்லுவார்கள். உங்கள் வாலிபர் தரிசனங்களை அடைவார்கள். உங்கள் மூப்பர் சொப்பனங்களைக் காண்பார்கள்”. தேவனாகிய கர்த்தர் நாம் ஒவ்வொரு நாளும் தேவனுடைய ஆவியானவரால் நிறைந்திருக்கவேண்டும் என்று விரும்புகிறார். (அப். 2:17-18)

**முடிவுரை:** தேவனுடைய குமாரன் யாரிடத்தில் இருக்கிறாரோ அவரிடத்தில் நித்திய வாழ்வு உண்டு. சமாதானமும், மகிழ்ச்சியும் தேவ ராஜ்ஜியத்தின் வல்லமையும் வேண்டுவோர் நம்மில் வாழும் இயேசு கிறிஸ்துவை எப்போதும் சார்ந்திருக்கவேண்டும். அவர் நம் வாழ்க்கையை அரசாட்சி செய்ய அனுமதிப்போம்.

**ஜெபம் / அழைப்பு:** இன்றைய சத்தியம் நமது இருதயங்களில் எழுதப்படும்படி இயேசுவின் நாமத்தினால் ஜெபியுங்கள்.